இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**இந்தோனேசிய ஆயர்களாகிய தாங்கள் அனைத்து வகையான வன்முறைகளையும் நிராகரிக்கிறோம் என்றும், ஆயர்கள் மற்றும் அதிகாரிகளை மட்டுமல்லாது, குடிமக்களையும் அமைதி, நீதி மற்றும் நாட்டின் ஜனநாயக மதிப்புகளுக்காக உழைக்குமாறு அழைக்கிறோம் என்று இந்தோனேசிய ஆயர் பேரவை சார்பில் அழைப்பு விடுத்துள்ளார் ஆயர் பிரான்சிஸ்குஸ் நிபா.**

# இந்தோனேசியாவில் அமைதி, நீதிக்காக அழைப்பு விடுக்கும் ஆயர்கள்



போராட்டம் நடந்த இடத்தில் காவல் பணியாளர்கள் (ANSA)

இந்தோனேசிய ஆயர்களாகிய தாங்கள் அனைத்து வகையான வன்முறைகளையும் நிராகரிக்கிறோம் என்றும், ஆயர்கள் மற்றும் அதிகாரிகளை மட்டுமல்லாது, குடிமக்களையும் அமைதி, நீதி மற்றும் நாட்டின் ஜனநாயக மதிப்புகளுக்காக உழைக்குமாறு அழைக்கிறோம் என்று இந்தோனேசிய ஆயர் பேரவை சார்பில் அழைப்பு விடுத்துள்ளார் ஆயர் பிரான்சிஸ்குஸ் நிபா.

செப்டம்பர் 2, செவ்வாயன்று பீதேஸ் என்னும் கத்தோலிக்க செய்தி நிறுவனத்திற்கு இந்தோனேசியாவில் நிலவும் சூழல் குறித்து எடுத்துரைத்த நேர்காணலின்போது இவ்வாறு கூறினார் மகசார் மறைமாவட்ட ஆயர் பிரான்சிஸ்குஸ் நிபா. Franciskus Nipa, இந்தோனேசிய கத்தோலிக்க ஆயர்களாக, அமைதிக்கும் வன்முறையற்ற முறைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் அழைப்பு விடுக்கும் செய்தியை மக்களிடையேப் பரப்பியுள்ளோம் என்று தெரிவித்துள்ள ஆயர் நிபா அவர்கள், அது உண்மையிலேயே பொது நன்மைக்கு சேவை செய்கிறது, என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அர்த்தமற்ற மற்றும் அநீதியான வார்த்தைகள், செயல்கள் மற்றும் கொள்கைகளால் ஏற்பட்ட ஆழ்ந்த ஏமாற்றத்தை மக்களின் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் பிரதிபலிக்கின்றன என்றும், உண்மை மற்றும் நீதிக்காகப் போராடி காயமடைந்த அல்லது உயிர் இழந்த சகோதர சகோதரிகளுக்கு தங்களின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர் இந்தோனேசிய ஆயர்கள்.

இந்தோனேசியாவில் உள்ள நிர்வாக, சட்டமன்ற மற்றும் நீதித்துறை அரசாங்கக் கிளைகள், மக்களின் விருப்பங்களைக் கவனமாகக் கேட்டு, நியாயமாகவும் பொறுப்புடனும் செயல்படவும், வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுள்ள நிர்வாகத்தை உறுதி செய்யவும்" அழைப்பு விடுத்துள்ளனர். பொருள் சேதத்தை ஏற்படுத்துகின்ற, தீங்கு விளைவிக்கின்ற மற்றும் சகோதரத்துவத்தையும் தேசிய ஒற்றுமையையும் தடுக்கின்ற குற்றச் செயல்களைத் தவிர்க்க அனைத்து குடிமக்களையும் வலியுறுத்தியுள்ள ஆயர்கள், பாதுகாப்புப் படைகள், அனைத்து குடிமக்களின் உண்மையான பாதுகாவலர்களாக இருக்க வேண்டும் என்பதையும் நினைவு கூர்ந்துள்ளனர்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# ஆப்கானிஸ்தான் நில அதிர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் யுனிசெஃப்



நில அதிர்வால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் பகுதி (ANSA)

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள பேரழிவு தரும் நிலஅதிர்வினால் ஆயிரக் கணக்கான குழந்தைகள் ஆபத்தில் இருக்கின்றனர் என்றும், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் குடும்பங்களுக்கு யுனிசெஃப் அமைப்பினர் உதவி வருகின்றனர் என்றும் எடுத்துரைத்தார் ஆப்கானிஸ்தான் பகுதிக்கான யுனிசெஃப் பிரதிநிதி தாஜுதீன் ஓயேவாலே.

ஆகஸ்டு 31, ஞாயிறன்று மாலை கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட 6.0 ரிக்டர் அளவிலான ஆற்றல் மிக்க நிலஅதிர்வால் ஏராளமான இடங்கள் மற்றும் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்றும், பல குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர் என்றும் தெரிவித்தார் தாஜுதீன்.

யுனிசெஃப் குழுக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட பகுதிகளில் களத்தில் பணியாற்றி வருகின்றனர் என்றும், அவசரத் தேவைகளுக்கு விரைவாக பதிலளிக்க உள்ளூர் பங்காளர்கள் மற்றும் ஐ.நா. நிறுவனங்களுடன் இணைந்துப் பணியாற்றி வருகின்றனர் என்றும் எடுத்துரைத்தார் தாஜுதீன்.

குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான உயிர்காக்கும் தலையீடுகள், குனார் மாநிலத்தில் உள்ள சவ்கே மற்றும் நுர்கல் ஆகிய பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் முதலுதவி மற்றும் உடனடி சிகிச்சை அளிக்க நடமாடும் நலவாழ்வுக் குழுக்களை அனுப்புவது போன்ற பணிகளைச் செய்து வருவதாகவும் தெரிவித்தார் தாஜுதீன்.

வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு மருந்துகள், நலவாழ்வுப் பொருட்கள், குளிர்போக்கும் ஆடைகள், காலணிகள், போர்வைகள், சமையலறை உபகரணங்கள், அத்துடன் கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய அவசர பொருட்களையும் யுனிசெஃப் அனுப்பி வருகின்றது என்றும், குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் உயிர்வாழத் தேவையான உதவியை விரைவில் பெறுவதை உறுதி செய்வதற்காக, சுகாதாரம், குடிநீர், சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை பாதுகாப்பு, தற்காலிக தங்குமிடம் மற்றும் உளவியல் ஆதரவு ஆகியவற்றிற்கான அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது என்றும் குறிப்பிட்டார் தாஜுதீன்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# போர் நிறுத்தம் மற்றும் உரையாடலுக்காக வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை



வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த மக்கள் (AFP or licensors)

## ஆயுதங்களின் குரல் அமைதியாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் உடன்பிறந்த உணர்வு மற்றும் நீதிக்கான குரல் எழுப்பப்பட வேண்டும் - திருத்தந்தை

அலட்சிய மனப்பான்மைக்கு அடிபணியாமல், செபம் மற்றும் உறுதியான தொண்டுப்பணிகளின் வாயிலாக, போரினால் பாதிக்கப்படும் உக்ரைன் மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்றும் உடனடி போர் நிறுத்தம் மற்றும் உரையாடலுக்கான தீவிர அர்ப்பணிப்புக்கான வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்துகின்றேன் என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

உக்ரைனில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரானது தொடர்ந்து இறப்பையும், அழிவையும் விதைத்து வருகிறது என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், அண்மைய நாள்களில், தலைநகர் கீவ் உட்பட பல நகரங்களில் ஏற்பட்ட குண்டுவெடிப்புகளால் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதையும் நினைவுகூர்ந்தார்.

உக்ரைன் மக்கள், காயமடைந்த அனைத்து குடும்பங்களைச் சார்ந்தவர்கள் என அனைவரோடும் தனது நெருக்கத்தைப் புதுப்பிப்பதாக எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், பன்னாட்டு சமூகத்தின் ஆதரவுடன், ஆயுதங்களின் தர்க்கத்தை கைவிட்டு பேச்சுவார்த்தை மற்றும் அமைதியின் பாதையை எடுப்பதற்கான பொறுப்பானவர்களுக்கான நேரம் இது என்றும் கூறினார்.

அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்தில் பள்ளி திருப்பலியின் போது நடந்த துயரமான துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் கொல்லப்படும் எண்ணற்றக் குழந்தைகளுக்காக செபிப்போம் என்றும், நமது உலகத்தைப் பாதிக்கும் பெரிய மற்றும் சிறிய ஆயுதங்களின் தொற்றுநோயை நிறுத்த கடவுளிடம் மன்றாடுவோம் என்றும் தெரிவித்தார் திருத்தந்தை.

அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள், (எசாயா 2:4) என்ற எசாயா இறைவாக்கினரின் வாக்கை நிறைவேற்ற நம் அன்னை மரியா நமக்கு உதவுவாராக என்று கூறிய திருத்தந்தை அவர்கள்,

படகு விபத்தில் இறந்த ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் மற்றும் காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு நேர்ந்த நிலை குறித்து ஆழ்ந்த துயரம் நம் இதயங்களில் நிறைந்துள்ளது என்றும், இந்த கொடிய சோகம் உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் மீண்டும் மீண்டும் நிகழ்கிறது என்றும் கூறினார் திருத்தந்தை.

"நான் அந்நியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள் (மத் 25:35) என்ற இயேசுவினது வார்த்தையை முழுமையாக நடைமுறைப்படுத்த, தனிநபர்களாகவும், ஒரு சமூகமாகவும், கடவுள் நமக்குக் கற்பிக்க வேண்டும் என்று செபிப்போம் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், காயமடைந்த, காணாமல் போன மற்றும் இறந்த அனைவரையும் நம் இரட்சகரின் அன்பான அரவணைப்பில் ஒப்படைத்து செபிப்போம் என்றும் கூறினார்.

### படைப்பின் அக்கறைக்கான உலக செப நாள்

செப்டம்பர் 1, திங்களன்று படைப்பின் அக்கறைக்கான உலக செப நாளாகக் கடைபிடிக்கப்பட இருக்கின்றது என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், பத்து ஆண்டுகளுக்கு முன்பு, திருத்தந்தை பிரான்சிஸ், கான்ஸ்டாண்டிநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும்தந்தை, முதலாம் பர்த்தலோமேயு உடன் இணைந்து, கத்தோலிக்க திருஅவைக்காக இந்நாளை நிறுவினார் என்றும் கூறினார்.

படைப்பிற்கான செப நாளானது மிகவும் முக்கியமானதும் அவசரமானதும் ஆகும் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், இந்த ஆண்டின் கருப்பொருள் "அமைதி மற்றும் எதிர்நோக்கின் விதைகள்" என்று எடுத்துரைத்து, படைப்பிற்கான இந்த நாளை அக்டோபர் 4 புனித பிரான்சிஸ் அசிசியார் நாள் வரை நீட்டிப்பதாகவும் தெரிவித்தார்.

800 ஆண்டுகளுக்கு முன்பு புனித பிரான்சிஸ் அசிசியாரால் இயற்றப்பட்ட இயற்கையின் பாடல் வரிகளின் உணர்வில், கடவுளைப் புகழ்ந்து, அவருடைய இயற்கை என்னும் கொடையை அழிக்காமல், நமது பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பராமரிப்பதற்கான நமது உறுதிப்பாட்டைப் புதுப்பிப்போம் என்றும் எடுத்துரைத்தார்.

உரோம் இத்தாலி மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த மக்கள் அனைவரையும் வாழ்த்திய திருத்தந்தை அவர்கள் கூடியிருந்த அனைவருக்கும் தனது அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# “சினோடல் பயணம்”: பழைய வழக்கமல்ல, இது மாற்றத்திற்கான அழைப்பு







கோலாலும்பூர்: “திரு அவையின் ஒவ்வொரு புதியத் திட்டங்களும் முயற்சிகளும் அதன் மூலத்தை அடைவதாகும்” என நமது பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தீபகற்ப மலேசிய ஆயர்கள் மாநாட்டில் (PMPA) வலியுறுத்தினார். அவர் தமது உரையில் “நாம் அனைவரும் இறைவனின் துதர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் உண்மையான புதுப்பிப்பு நம் ஒவ்வொருவரிடமிருந்தே ஆரம்பிக்கின்றது. அப்படி இல்லையெனில் நாம் ஒன்றுக்கும் பயனற்றவர்களாகி விடுவோம்”, என்று பேராயார் அனைவருக்கும் நினைவுப்படுத்தினார். “சினோடல் மற்றும் தீர்க்கதரிசன திரு அவையை நோக்கி ஒன்றிணைந்த பயணம் – பிரசங்க சீடத்திற்கான மக்கள்” என்ற கருப்பொருளில் நடைபெற்ற ஒன்றுகூடலில் அவர் இவ்வாறு கூறினார். கோலாலம்பூர், பினாங்கு மற்றும் மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டங்களில் இருந்து ஆயர்கள், அருட்பணியாளர்கள் மற்றும் பொது நிலையினர் என 100-க்கும் அதிகமானோர் இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சி கடந்த ஆகஸ்ட் 26 மற்றும் 27 ஆகிய இரண்டு நாட்களுக்கு கோலாலும்பூரில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பு வெறும் திட்டமிடப்பட்ட கூட்டம் அல்ல. மாறாக மலேசிய திரு அவையின் சினோடல் பயணத்தின் ஒரு முக்கிய திருப்புமுனையாகவும் 2026ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டுக்கான (Malaysia Pastoral Convention) (MPC) வழிகாட்டியாகவும் அமைந்தது.

இம்மாநாட்டில் சிங்கப்பூரைச் சேர்ந்த இறையியல் வல்லுநர் மற்றும் Jesuit Conference of Asia Pacific ஆலோசகருமான டாக்டர் கிறிஸ்தினா கெங் அவர்கள், தம்முடைய உலகளாவிய சினோடல் அனுபவங்களுடன் இந்த அமர்வை வழிநடத்தினார். “இது இரண்டாம் வாத்திக்கான் மன்றத்திற்குப் பிறகு திரு அவையில் ஏற்பட்ட மிகப்பெரிய முன்னேற்றம்” என அவர் சினோடாலிட்டியை வர்ணித்தார்.

அவரைத் தொடர்ந்து சிஸ்டர் மார்கிரெட் ஸ்தா மரியா, டெரில் தான், அருட்தந்தை ஃபேபியன் டீக்கம் மற்றும் பேராயர் ஜூலியன் ஆகியோர் மலேசிய சூழலில் மக்கள் சந்திக்கும் மீட்புப்பணி சவால்களைப் பற்றி எடுத்துரைத்தனர்.



பங்கேற்பாளர்கள் “பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதல் உரையாடல்” (Conversation in the Spirit)-யில் பங்கெடுத்தனர். குடும்பம், திரு அவை, சுற்றுச்சூழல் (Ecology), சமூகம் ஆகிய நான்கு முக்கிய தலைப்புகளில் செபம், கலந்துரையாடலில் “உறவுகளில் மாற்றத்தின்” அவசியத்தைக் குறித்து கருத்துகளைப் பகிர்ந்தனர்.

‘சினோடாலிட்டி’ என்பது வெறும் ஒன்றுகூடுதல் கூட்டங்களோ அல்லது அறிக்கைகளோ அல்ல. அது அனைவரது இதயங்களிலும், உறவுகளிலும், கட்டமைப்புகளிலும் மாற்றத்தை உருவாக்க வேண்டும். இன்றைய இளைஞர்களோ, யாரும் தங்கள் கருத்துகளைக் கேட்பதில்லை என்று உணர்ந்து அனைத்து காரியங்களில் இருந்தும் விலகுகின்றனர்; புலம்பெயர்ந்தோர் மற்றும் ஏழைகள் இன்னும் திரு அவையின் விளிம்பில் நிறுத்தப்படுகின்றனர். இதற்கு தீர்வு கிடைக்க வேண்டும். புதுப்பிப்பு அனைவர் வாழ்விலும் பிரதிபலிக்க வேண்டும்; இல்லையெனில் நாம் வெறும் “வெற்றுக் காசுகளாக” மட்டுமே ஆகி விடுவோம். மாற்றத்திற்கான முன்னெடுப்புகள் முன்மொழியப்பட்டு மாநாடு நிறைவை எட்டியது.

# கூலிம் திரு இருதய பங்கில் மறைக்கல்வி ஞாயிறு கொண்டாட்டம்

கடந்த 22 ஆகஸ்ட்டு 2025 நாளன்று கூலிம் திரு இருதய ஆண்டவர் பங்கில் புதிதாக மாற்றலாகி வந்த குருவானவர் அருட்பணியாளர் டெஸ்மன் ஜான்சன் (Desmond Jenson) தமிழ் மறைக்கல்வியில் மறைப்பரப்பும் மறைக்கல்வி ஞாயிறு திருப்பலியையும் சிறப்பாக கொண்டாடினார். இத்திருப்பலியில் 80 மாணவர்களும் மறைக்கல்வி ஆசிரியர்களும் பங்கெற்றனர்.





# திருச்சிலுவை மகிமை விழா

இன்று திருஅவை திருச்சிலுவை மகிமை விழவைக் கொண்டாடுகிறது.

திருச்சிலுவைக்கு வணக்கம் செலுத்தும் வழக்கம் திருஅவை முழுவதும் படிப்படியாக வளர்ந்தது. 1970 ஆம் ஆண்டு வரை இவ்விழா திருச்சிலுவை உயர்த்தப்பட்ட நாளாக நினைவுக்கூரப்படுகிறது. 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்விழா திருச்சிலுவையின் மகிமை விழா என பெயர் மாற்றம் கண்டது.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், புனித பவுல், 'கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிடமும் இருப்பதாக!' என்று பிலிப்பியருக்கு அறிவுரை வழங்கும் பகுதியில், கிறிஸ்து இயேசுவின் மனநிலை எப்படிப்பட்டது என்பது ஓர் அழகான பாடல் வழியாக எடுத்துரைக்கின்றார். தொடக்கத் திருஅவையின் தொடக்கத்தில் வழக்கத்திலிருந்த இப்பாடல் இயேசுவைப் பற்றிய பின்வரும் மூன்று விடயங்களை வலியுறுத்துகிறது. அவை:

ஒன்று, இயேசு அடிமையின் வடிவம் ஏற்றார். இரண்டு, மனிதரின் உருவம் என்பது இயேசுவின் மனுவுருவாதலைக் குறிக்கின்றது. மூன்று, சிலுவையின் மரணம் என்பதை இன்று நினைவுகூர்ந்து மனதில் நிறுத்துவோம். இவற்றின் அடிப்படையில் இன்றைய விழாவானது நமக்கு வலியுறுத்துவது:

(அ) முதல் மற்றும் மூன்றாம் வாசகங்கள் சொல்வது போல, இயேசுவை உற்று நோக்கும் அனைவரும் நலம் பெறுவர்.

(ஆ) சிவை என்பது மாற்றம் நடக்கும் என்னும் எதிர்நோக்கைத் தருகின்றது.

(இ) நம் வாழ்வில் சிலுவை என்பது பல வடிவங்களில் வருகின்றன.

அவற்றை நோக்கி நம் கண்களை எழுப்பும்போதெல்லாம் இந்த நாளின் பொருளை நாம் உணர்கின்றோம்.

உலகத்தின் மீட்புக்காக இயேசு சிலுவையில் தம் உயிரைக் கொடுத்திருக்காவிடில் சிலுவையை ஒருபோதும் "மகிழ்ச்சியில்" காண முடியாது. சிலுவை, அதுவே வன்முறை மரணத்தின் ஒரு கருவியாகும். இது அவமானம் மற்றும் சித்திரவதைக்கான ஒரு கருவியாகும். இயேசு அதில் உயிர்விட்டதால் இன்று மகிழச்சியின், நம்பிக்கையின் சின்னமாக ஒளிர்க்கின்றது.

இந்த உண்மையானது, கடவுளால் எதையும், எல்லாவற்றையும் செய்ய முடியும் என்ற உணர்விற்கு நம்மை இட்டுச் செல்கிறது. கடவுள் அவமானச் சின்னத்தையும் பயன்படுத்தி அதை சிறந்ததாக மாற்ற முடியும் என்பதையும் தெளிவாக்குகிறது. உண்மை என்னவென்றால், நமது பாரமான சிலுவை (துன்பங்கள், பாடுகள்) எதுவாக இருந்தாலும், அந்த துன்பம் நமது வாழ்க்கையிலும் உலகிலும் கடவுள் அருளின் உன்னத கருவியாக நமக்கு மாறும்.

இன்று நமது சொந்த சிலுவைகளைப் பற்றி சிந்திப்போம். அவை நமக்கு ஒரு சுமையல்ல. அதனை சுமக்க இயேசு துணை வருகிறார். நமது பாடுகளை, துன்பங்களை கிறிஸ்துவின் சிலுவையுடன் இணைக்க வேண்டும். சிலுவையின் சுமை எளிதாகும். இயேசு, மத்தேயு 10:38-ல்,

“தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்” என்று எச்சரித்ததை இன்று நினைவுக்கூர்கிறோம்.

- ஆர்.கே.சாமி, காஜாங்

## பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.